Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com R.DIS No: 60/2021 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான இல்லம்
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | ஞாயிற்றுக்கிழமை, ஆகஸ்ட் 08, 2021 | 4 பக்கங்கள் | ரூ.2/- | இதழ் 25

# "நூற்றாண்டு காணப்போகும் கலைஞர் புகழ், ஆயிரம் ஆண்டுகள் நிலைத்திருக்க அரும்பணியாற்றுவோம்"

# தமிழ்நாடு முதலமைச்சர், மு.க.ஸ்டாலின்

சென்னை, ஆகஸ்ட் 08 2021: முத்தமிழறிஞர் கலைஞர் நம்மைத் தவிக்க விட்டு மறைந்து மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டது! அவர் மறையவில்லை, நம்முள் இருந்து நம்மை வழிநடத்திக் கொண்டுதான் இருக்கிறார் என்று நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். இன்னமும் தலைவர் கலைஞர் எங்கும் நிறைந்து நம்மை இயக்கிக் கொண்டுதான் இருக்கிறார்! நம் முன்னால் நின்று இயக்கிக் கொண்டு இருக்கும் தலைவராகவும் முதலமைச்சராகவும்தான் நான் அவரைப் பார்க்கிறேன்!

கழக ஆட்சி மலர வேண்டும் எனக் கனவு கண்டார். அந்தக் கனவை மூன்று மாதங்களுக்கு முன்பு தான் உடன்பிறப்புகளின் உறுதுணையோடு நிறைவேற்றிக் காட்டினோம். கழக ஆட்சி அமைந்தால் என்னென்ன திட்டங்கள் நிறைவேற்ற வேண்டும் என்று தலைவர் கலைஞர் அவர்கள் கனவு கண்டார்களோ அத்தகைய கனவுத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம்!



தலைவர் கலைஞர் அவர்களின் சிந்தனையை நிறைவேற்றுவதை விட அவருக்குச் சிறந்த அஞ்சலி இருக்க முடியாது அல்லவா?

தனக்குப் பிறகும் தான் இருந்து நடத்துவதைப் போலவே கட்சியும் ஆட்சியும் இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார் தலைவர் கலைஞர். அந்த ஆசையை இந்த மூன்றாண்டு காலத்தில் நிறைவேற்றி வருகிறேன் என்பதே எனது நிம்மதிப் பெருமூச்சு!

இனி தமிழ்நாட்டில் கழகத்தின் ஆட்சியே என்ற பெரும் உறுதிமொழியை இன்று நாம் எடுப்போம்!

தமிழை, தமிழர்களை, தமிழ்நாட்டை திராவிட இயக்கச் சிந்தனையின் அடிப்படையில் வளர்த்தெடுக்க உறுதியேற்போம்!

நூற்றாண்டு காணப் போகும் கலைஞர் அவர்களே, உங்கள் புகழ் ஆயிரம் ஆண்டுகள் நிலைத்திருக்க அரும்பணியாற்றுவோம்!

## மேல்மலையனூரில் ரூ 67 லட்சம் மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் வழங்கினார்



செஞ்சி,ஆக 08 2021: விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூரில் பேரிடர் மேலாண்மை மற்றும் வருவாய்த்துறை சார்பில் உங்கள் தொகுதியில் முதமைச்சர் திட்டத்தின் கீழ் வரப்பெற்ற மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு 517 பயனாளிகளுக்கு ரூ 67, 63,457. லட்சம் மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் வெள்ளிக்கிழமை வழங்கினார்.

இந்நிகழ்ச்சிக்கு திண்டிவனம் சார் ஆட்சியர் எம்.பி.அமித் வரவேற்றார். விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் த.மோகன் தலைமை வகித்தார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் பூ.காஞ்சனா முன்னிலை வகித்தார்.

இதில் 98 நபர்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா, பட்டா மாற்றம் முழு புலம் 57 பேருக்கும், பட்டா மாற்றம் உட்பிரிவு 77 பேருக்கும், 157 பேருக்கு முதியோர் உதவித்தொகை 114 நபர்களுக்கு மின்னணு குடும்ப அட்டை, 11 மாற்றுத்திறனாளிகளுக்கு மோட்டார் பொருந்திய தையல் இயந்திரம், 3 நபர்களுக்கு 8 கிராம் தாலிக்கு தங்கம் மற்றும் 517 பேருக்கு திருமண நிதியுதவி ஆகியவற்றை அமைச்சர் செஞ்சிமஸ்தான் வழங்கி சிறப்புரையாற்றினார்.

தமிழக முதல்வர் ஸ்டாலின் ஆட்சிப்பேற்றவுடன் பல்வேறு வளர்ச்சித்திட்டபணிகளை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார். கிராமத்தில் உள்ள பொது மக்களுக்கு அரசு திட்டங்கள் சென்றடையும் வகையில் உங்கள் தொகுதியில் முதமைச்சர் திட்டத்தினை தொடங்கி வைத்து பொது மக்களிடமிருந்து பல்வேறு மனுக்களை பெற்று அம்மனுக்கள் மீது உடனடியாக தீர்வு காணப்பட்டு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

100 நாட்களில் மனுக்கள் மீது தீர்வு காணப்படும் என கூறிய முதல்வர் 30 நாட்களிலேயே மனுக்கள்மீது தீர்வு காணப்பட்டு நலத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ள முதல்வர்களுக்கெல்லாம் முதல் அமைச்சராக மு.க.ஸ்டாலின் விளங்கி வருகிறார் என்று பேசினார்.

விழாவில் மாவட்ட ஆட்சியர் மோகன் பேசியது.

நுண்ணுயிர் பாசன திட்டத்திற்கு ரூ 26 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்காக விழுப்புரம் மாவட்டத்தில் 6 ஆயிரம் ஹெக்டேரில் நுண்ணுயிர் பாசன திட்டம் தொடங்கப்பட உள்ளது. இதில் விவசாயிகள் குறைந்த அளவில் நீர் பாசனம் பெற்று பயிர் மற்றும் செடிகளை வளர்க்க முடியும். இதற்காக சிறு, குறு விவசாயிகள் சான்றுகளை பெற வேண்டும். விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 34 பிரிக்காக்களின் முகாம் ஏற்படுத்தப்பட உள்ளது. இந்த மையங்களில் சென்று விவசாயிகள் சான்றினை பெற்று இந்த திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம்.

100 நாள் வேலை திட்டம் விழுப்புரம் மாவட்டத்தில் முழுமையாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒரு நாளைக்கு ரூ 223 கூலித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இந்த பணிகளில் கிராம மக்கள் முழுமாயாக ஈடுபட்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன். தனித்துறை ஆட்சியர் பெருமாள், மேல்மலையனூர் வட்டாட்சியர் நெகருன்னிசா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் மூலம் 2 நாட்களில் 13,247 பேர் பயன் - அமைச்சர் மா. சுப்பிரமணியன்

சென்னை, ஆகஸ்ட் 08 2021: மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தை கடந்த 5-ந்தேதி முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

இந்த திட்டப்படி சர்க்கரை வியாதி, ரத்த அழுத்தம் போன்ற நாட்பட்ட வியாதிகளுக்கு வீடு வீடாக சென்று 2 மாதங்களுக்கு ஒருமுறை தேவையான மருந்து-மாத்திரைகள் வழங்கப்படுகின்றன.



அதே போல் பிசியோ தெரபி, டயாலிசிஸ் சிகிச்சைகளும் வீடு வீடாக சென்று அளிக்கப்படுகிறது. பொதுமக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பு பெற்றுள்ள இந்த திட்டத்தில் கடந்த 2 நாட்களில் மட்டும் 13,247 பேர் பயன் அடைந்துள்ளதாக அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

அவர்களில் 3,772 பேர் சர்க்கரை நோயாளிகள், 5,816 ரத்த அழுத்த நோயாளிகள், இரண்டும் சேர்ந்தவர்கள் 2,768 பேர் ஆகும்.

## ஊழல் செய்வதிலேயே குறியாக இருந்தது அ.தி.மு.க அரசு மக்களுக்கு நன்மை செய்வதிலேயே குறியாக இருக்கின்றது தி.மு.க அரசு திண்டிவனத்தில் சிறுபான்மைப் பிரிவினர் அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் பேச்சு

திண்டிவனம், ஆக 08 2021: திண்டிவனம் அடுத்த கொள்ளார் கிராமத்தில் 500-க்கும் மேற்பட்ட ஏழை எளியவர்களுக்கு நிவாரண பொருட்களை வழங்கி அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் சிறப்புரையாற்றினார். அப்போது அவர் கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கு தனியார் மருத்துவமனைகளில் பெரிய அளவில் பணம் கேட்டு பேரம் நடப்பதாக தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு கிடைத்த தகவலின் பேரில் ஏழை, எளியவர்கள் பயன்பெறும் வகையில் தனியார் மருத்துவமனையில் கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் திட்டத்தையும், அந்த திட்டத்தின் மூலம் பயன் பெறும் பயனாளிகள் செலுத்த வேண்டிய தொகையை கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் அரசே செலுத்தும் என்றும் அறிவித்த ஒரே முதல்வர் இந்தியாவில் நமது முதல்வர் மு.க. ஸ்டாலின் மட்டுமே என்றார். மேலும் அவர், கடந்த தி.மு.க ஆட்சியில் கொண்டு வரப்பட்ட மாணவர்களுக்கு மதிய உணவில் முட்டை வழங்கும் திட்டத்தில் அ.தி.மு.க ஆட்சிக்கு வந்தவுடன் தரமில்லாத முட்டைகளை மாணவர்களுக்கு வழங்கி அவர்களது உடல் நலத்திற்கு கேடு விளைவித்தது அ.தி.மு.க அரசு. அதேபோன்று பொதுமக்களுக்கு குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்படுகின்ற துவரம் பருப்பில் சத்து தன்மை குறைவாக இருந்த பருப்பை பொதுமக்களுக்கு வழங்கி அதிலும் ஊழல் செய்தது அ.தி.மு.க அரசு. இப்படி அனைத்து திட்டங்களிலும் ஊழலை மட்டுமே செய்வதில் குறிக்கோளாகக் கொண்டு ஆட்சி செய்து அ.தி.மு.க அரசு.



ஆனால், பொது மக்களுடைய நன்மைகளை மட்டுமே கருத்தில் கொண்டு தற்போது தி.மு.க அரசு செயல்பட்டு வருகின்றது என்றார்.

இந்நிகழ்ச்சியை வழக்கறிஞர் கமலக்கண்ணன் ஏற்பாடு செய்திருந்தார். இந்நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர்.ஆர்.மாசிலாமணி, வழக்கறிஞர் ஆர்.சேதுநாதன், மாநில பொதுக்குழு உறுப்பினர் என்.ரமணன், வழக்கறிஞர் அணி கே.சி. ஆதித்தன், அருணகிரி, ஒன்றிய செயலாளர் மணிமாறன், சிறுபான்மைப் பிரிவு அன்சாரி, கொள்ளார் வீராசாமி, ஞானசேகர், தெய்வ கண்ணன், சுலோச்சனா, ரவி, ஜெயபால், ஆலகிராமம் சுரேஷ், சந்திரன், நடுவனந்தல் சேகர், தீவனூர் சேகர், வெங்கந்தூர் பாஸ்கர், பிரபு மற்றும் நிர்வாகிகள் முனியாண்டி உள்ளிட்டோர் கலந்துக் கொண்டனர்.

## ஜான்சன் அண்ட் ஜான்சனின் ஒற்றை டோஸ் தடுப்பூசியை பயன்படுத்த அனுமதி

புதுடெல்லி, ஆகஸ்ட் 08 2021: அமெரிக்காவில் ஜான்சன் அண்ட் ஜான்சன் நிறுவனம் கொரோனா தடுப்பூசியை உருவாக்கி, பயன்பாட்டுக்கு கொண்டு வந்துள்ளது. இந்த தடுப்பூசி ஒற்றை டோஸ் தடுப்பூசி ஆகும். இந்த மருந்தை இந்தியாவில் பயன்படுத்த அனுமதி கோரி ஜான்சன் அண்ட் ஜான்சன் நிறுவனம் விண்ணப்பித்துள்ளது. மூன்றாம் கட்ட பரிசோதனையில் கடுமையான நோயை தடுப்பதில் 85 சதவீதம் செயல்திறனை காட்டியதாகவும், தடுப்பூசி போட்ட 28 நாட்களுக்குப் பிறகு சிறந்த பாதுகாப்பை அளிப்பதாகவும் ஜான்சன் அண்ட் ஜான்சன் நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்த நிலையில், இந்தியாவில் ஜான்சன் அண்ட் ஜான்சன் தடுப்பூசிக்கு அவசரகால அனுமதி வழங்கியது மத்திய அரசு. 4 தடுப்பூசிகளுக்கு அனுமதி தரப்பட்ட நிலையில், தற்போது 5-வதாக ஒரு டோஸ் போட்டுக்கொள்ளும் வகையில் தயாரித்துள்ள ஜான்சன் அண்ட் ஜான்சன் நிறுவனத்தின் தடுப்பூசிக்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கி உள்ளது.




**திருவண்ணாமலை, ஆகஸ்ட் 08 2021: திருவண்ணாமலையில் உலகத் தாய்ப்பால் வார விழாவை முன்னிட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் முருகேஷ் துண்டுப்பிரசுரங்களை வழங்கி விழிப்புணர்வு வாகனத்தை கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் முத்துக்குமாரசாமி.**



ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி
நிருபர்கள் தேவை
தமிழகமெங்கும் காலையில் வெளிவரும்
ஹலோ மிரர் மெட்ராஸ் நாளிதழுக்கு
மாவட்டம், தாலுகா, பகுதி, நகர வாரியாக
அனுபவமுள்ள நிருபர்கள் தேவை
தொடர்புக்கு 8148231942
hellomadrasdaily@gmail.com

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி
ஞாயிற்றுக்கிழமை,
ஆகஸ்ட் 08, 2021

# தேங்கி நிற்கும் கழிவு நீரில் காகித கப்பல் விடும் போராட்டம்

## தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தை கண்டித்து சாத்தூர் நகர காங்கிரஸ் கமிட்டி அறிவிப்பு

*சாத்தூர், ஆக-08 2021:* விருதுநகர் மேற்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் ரங்கசாமி தலைமையில், சாத்தூர் நகர காங்கிரஸ் கமிட்டி செயல்வீரர்கள் கூட்டம் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. நகர காங்கிரஸ் கமிட்டி தலைவர் அய்யப்பன், மாவட்ட பொதுச்செயலாளர் ஜோதி நிவாஸ், நகர பொருளாளர் செந்தியப்பன், லட்டு கருப்பசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில்,

சாத்தூர் நான்கு வழிச்சாலை படந்தால் சந்திப்பில் கிழக்குப் பக்க உள்ள சர்வீஸ் ரோட்டில் இருக்கும் மழைநீர் செல்லும் வாறுகாலில் பல ஆண்டுகளாக மண் மேவி அடைப்பு ஏற்பட்டுள்ளது .இதனால் கழிவுநீர் செல்ல வழியில்லாமல் சர்வீஸ் ரோட்டில் கழிவுநீர் தேங்கி நின்று துர்நாற்றம் வீசுகிறது. .இதை சரிசெய்ய கோரி பலமுறை கோரிக்கை மனு அனுப்பியும் இதுநாள் வரையும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேலும், தமிழக முதல்வர் சிறப்பான ஆட்சிக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் உள்ளது. எனவே மழை நீர் செல்லும் வாறுகால் உடனடியாக சரிசெய்யவேண்டும் சரி செய்யாத நிலை தொடர்ந்தால் மக்கள் நலன் கருதி இந்திய நெடுஞ்சாலை ஆணையத்தை கண்டித்து சாத்தூர் நகர காங்கிரஸ் கமிட்டி சார்பாக 17-08- 2021 அன்று சர்வீஸ் ரோட்டில் தேங்கி நிற்கும் கழிவு நீரில் காகித கப்பல் விடும் போராட்டம் நடத்தப்படும் என்று தீர்மானம் ஏகமனதாக



நிறைவேற்றப்பட்டது. சாத்தூர் சட்டமன்ற தொகுதி இளைஞர் காங்கிரஸ் தலைவர் கார்த்திக், மாவட்டச் செயலாளர் சந்திரன், ஒன்றிய செயலாளர் ரமேஷ், வட்டார துணைத்தலைவர் ஒத்தையால் முத்துவேல், நகர பொதுச்செயலாளர் ரவி, சீனிவாசன் ,சோலையப்பன், வெள்ளைச்சாமி, ஆறுமுகம், காசி, சின்னப்பன், மணிவண்ணன், சங்கர் ,பாண்டியன், ராகுல் இளங்கோவன், அரிகிருஷ்ணன் மூக்கையா, பாரத், டெய்லர் மாரியப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தொமுச சார்பில் தலைவர் டாக்டர் கலைஞரின் மூன்றாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி

*திருப்பூர் ஆகஸ்ட் 08 2021:* மின்சார வாரிய தொமுச சார்பில் திமுகழக தலைவர் டாக்டர் கலைஞரின் மூன்றாம் ஆண்டு நினைவு நாளையொட்டி திருப்பூர் மாநகரம் பி. என் ரோடு போயம்பாளையம் ஆர். கே நகர் மின்சார வாரிய பிரிவு அலுவலகம் அருகில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்ச்சி தொமுச செயலாளர் ஈ. பி. அ. சரவணன் தலைமையில் நடைபெற்றது.

இதில் மாவட்ட தொமுச பேரவை கவுன்சில் துணை தலைவர் ஆர்.ரெங்கசாமி, ஆர் கே நகர் மின்சார வாரிய ஜோதிபாசு, தமிழ், பாண்டியன் நகர் செல்வம், தொமுச நிர்வாகிகள் மின்சார வாரிய தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

திருப்பூர் மாவட்டம் பெருமாநல்லூர் மின்சார வாரிய துணை மின் நிலையம் அருகில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்ச்சியில் தொமுச கவுன்சில் துணை தலைவர் ஆர். ரெங்கசாமி, செயலாளர் ஈ. பி. அ .சரவணன், ஈ.பி. செந்தில் (எ) பழனிச்சாமி, ஈ.பி. விஜயன், பூபதிராஜா , ரவி, அய்யாசாமி, விஸ்வநாதன், விஜய் மற்றும் மின்சார வாரிய தொழிலாளர்கள் , தொமுச நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



அதனைத் தொடர்ந்து திருப்பூர் மேட்டுப்பாளையம் பஸ் நிறுத்தம் அருகிலுள்ள மின்வாரிய மேற்பார்வை பொறியாளர் அலுவலகம், குமார் நகர் மின்வாரிய துணை மின் நிலையம், திருப்பூர் மின்வாரிய கோட்ட அலுவலகம், அனுப்பர்பாளையம் மின்வாரிய பிரிவு அலுவலகம், வேலம்பாளையம் துணை மின் நிலையம், பாண்டியன் நகர் மின்வாரிய பிரிவு அலுவலகம், வாவிபாளையம் பூலுவப்பட்டி மின்வாரிய பிரிவு அலுவலகம், பெருமாநல்லூர் மின்வாரிய பிரிவு அலுவலகம், மின்வாரிய கோட்ட அலுவலகம் உட்பட திருப்பூர் மாவட்ட பகுதிகளில் 15 க்கும் மேற்பட்ட இடங்களில் மின்சார வாரிய தொமுச சார்பில் தலைவர் டாக்டர் கலைஞரின் மூன்றாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சங்கத்தின் செயலாளர் ஈ.பி. அ .சரவணன் செய்திருந்தார். இந்த நிகழ்ச்சியில் தொமுச நிர்வாகிகள், மின்சார வாரிய தொழிலாளர்கள் கலந்து கொண்டு தலைவர் டாக்டர் கலைஞரின் திருவுருவப்படத்திற்கு மலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

# மறைந்த முன்னாள் முதல்வர் கலைஞருக்கு தீவனூரில் மூன்றாமாண்டு நினைவஞ்சலி

*திண்டிவனம், ஆக. 08 2021:* விழுப்புரம் வடக்கு மாவட்டம், மயிலம் வடக்கு ஒன்றிய தி.மு.க சார்பில் தீவனூரில் முன்னாள் முதல்வர் கருணாநிதியின் மூன்றாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் முன்னாள் முதல்வர் கலைஞரின் மூன்றாமாண்டு நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இதேபோல் நேற்று விழுப்புரம் வடக்கு மாவட்டம், மயிலம் வடக்கு ஒன்றிய தி.மு.க சார்பில் தீவனூரில் கலைஞர் கருணாநிதியின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு மயிலம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணிமாறன் தலைமை தாங்கினார். சிறப்பு அழைப்பாளராக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் ஆர். மாசிலாமணி கலந்து கொண்டு கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். தி.மு.க தொண்டர்களின் அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சிக்கு பின் பொதுமக்களுக்கு உணவு வழங்கப்பட்டது.



இந்நிகழ்ச்சியில் தி.மு.க நிர்வாகிகள் கண்ணன், சேகர், குப்பன், ஞானசேகர், தீவனூர் சேகர், குமரேசன், வர்த்தகர் அணி செழியன், வெங்கந்தூர் பாஸ்கர், உதயா, ஆலகிராமம் சுரேஷ், சந்திரன், கண்ணன், கொடிமா கோபால், முப்புலி கோபாலகிருஷ்ணன் கேணிப்பட்டு கே.எஸ்.செந்தில்குமார், அவ்வையார்குப்பம் ஆறுமுகம், முட்டியூர் கருணாகரன், தாஸ், பெரமண்டூர் அர்ஜுணன், ராஜா, வேம்பூண்டி பாக்யராஜ், சக்திவேல், கொள்ளார் வீராசாமி, முனியாண்டி, தெய்வகண்ணன், மண்டகப்பட்டு எல்லப்பன், நடுவனந்தல் ரத்தினவேல், ஆறுமுகம், அகூர் சண்முகம் உள்ளிட்ட ஏராளமான தி.மு.க தொண்டர்களும், பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

# செண்டூர் முத்துமாரியம்மன் கோவிலில் ஆடி வெள்ளியையொட்டி செடல் உற்சவம்

*திண்டிவனம், ஆக. 08 2021:* திண்டிவனம் அடுத்த செண்டூர் முத்து மாரியம்மன் கோவிலில் ஆடி மூன்றாவது வெள்ளியையொட்டி பால்குட ஊர்வலம் மற்றும் செடல் உற்சவம் நடந்தது.





விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் அடுத்த செண்டூர் கிராமத்தில் ஆண்டு தோறும் ஆடி மாதம் மூன்றாவது வெள்ளிக்கிழமைகளில் ஶ்ரீ முத்துமாரி அம்மனுக்கு கூழ்வார்த்தல் திருவிழா நடைபெறுவது வழக்கம்.

அதேபோல் நேற்று முன்தினம் ஆடி மாதம் மூன்றாவது வெள்ளிக்கிழமை என்பதால் செண்டூர் கிராமத்தில் எழுந்தருளியுள்ள ஶ்ரீ முத்துமாரி அம்மனுக்கு காலை எட்டு மணி அளவில் பால்குட ஊர்வலமும் அதனை தொடர்ந்து மதியம் ஒரு மணிக்கு கூழ்வார்த்தல் திருவிழாவும், பிறகு 3 மணி அளவில் ஊரணி பொங்கல் நிகழ்ச்சியும் அதன் பிறகு பக்தர்கள் நேர்த்திக்கடனாக அலகு குத்துதல் மற்றும் செடல் போன்ற நேர்த்திக் கடன்களும் ஶ்ரீ முத்து மாரியம்மனுக்கு செலுத்தினர்.

இரவு 9 மணி அளவில் ஶ்ரீ முத்துமாரியம்மன் வீதி உலாவும் நடைபெற்றது. சுவாமி செண்டூர் கிராம வீதிகளில் இரவு முழுவதும் வலம் வந்து நேற்று அதிகாலை கோவிலை வந்தடைந்தது.

விழா ஏற்பாடுகளை செண்டூர் கிராம மக்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

# கோவை- வால்பாறையில் பட்டப்பகலில் குடியிருப்பு பகுதியில் யானை நடமாடியதால் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர்

*கோவை, 08 2021:* கோவை மாவட்டம் வால்பாறை சுற்றுவட்டார பகுதிகளில் தற்போது காட்டு யானைகள் கூட்டமாகவும் தனித்தனியாகவும் சுற்றித்திரிந்து வருகின்றன இந்நிலையில் வால்பாறை அருகே உள்ள அய்யர்பாடி இரண்டாவது டிவிசன் பகுதியில் இருக்கும் டென்னிஸ் மட்டம் என்ற பகுதியில் நேற்று மாலை சுமார் மூன்று மணியளவில் நுழைந்த மொட்டைவாலுடன் கூடிய ஒரு காட்டு யானை அப்பகுதியிலேயே சுற்றித்திரிந்துள்ளது இதனால் அப்பகுதி பொதுமக்களும் அருகே பணிபுரிந்த தேயிலைத்தோட்ட தொழிலாளர்களும் பெரும் பீதியடைந்துள்ளனர். உடனே அப்பகுதியிலிருந்த இளைஞர்கள் ஒன்றுகூடி சத்தம்போட்டு அந்த ஒற்றை காட்டுயானையை அப்பகுதியிலிருந்து விரட்டியுள்ளனர் மேலும் அதே அய்யர்பாடி பகுதி அஞ்சலகம் அருகே உள்ள தொழிலாளி நவி தேவராஜ் என்பவரின் வீட்டின் முன்புரமுள்ள ஒருபலாமரத்தை நேற்று முன்தினம் இரவு அந்தயானை சுற்றிச்சுற்றி வந்து இரவு முழுவதும் அப்பகுதியிலேயே முகாமிட்டுள்ளது. மேலும் அய்யர்பாடி பகுதியில் காட்டுயானைகள் கூட்டமாகவும் தனித்தனியாகவும் மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் அடிக்கடி நுழைந்து சுற்றித்திரிவதால் காட்டுயானைகள் குடியிருப்பு பகுதிகளில் நுழையாமல் தடுக்க சம்பந்தப்பட்ட வனத்துறையினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# டிரோன்கள் மூலம் கொசு மருந்து தெளிக்கப்பட்டதால் கொசு தொல்லை 90 சதவீதம் குறைந்துள்ளது - சென்னை மாநகராட்சி

*சென்னை, ஆகஸ்ட் 08 2021:* சென்னை நகரில் கொசு தொல்லையை ஒழிக்க சென்னை மாநகராட்சி பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

வடகிழக்கு பருவமழை காலத்துக்கு முன்பே கொசுத் தொல்லையை கட்டுக்குள் கொண்டு வர புதிய யுக்தியை பயன்படுத்த முடிவு செய்யப்பட்டது.

ஊழியர்கள் செல்ல முடியாத நீர்நிலைகள், நீர் வழிப்பாதைகள், புதர்களில் கொசுக்களை அழிக்க டிரோன் மூலமாக பூச்சிக்கொல்லி மருந்து தெளிக்க திட்டமிடப்பட்டது.

முதலில் சோதனை முறையில் தொடங்கப்பட்ட இத்திட்டத்தில் அண்ணா பல்கலைக்கழகத்தின் நான்கு டிரோன்கள் பயன்படுத்தப்பட்டன.

கூவம், அடையாறு மற்றும் பக்கிங்காம் என 140 கிலோ மீட்டர் தூரமுள்ள நீர்வழிப்பாதைகளில் டிரோன்கள் மூலம் கொசு மருந்து தெளிக்கும் பணி தொடங்கியது. பல பகுதிகளில் தினமும் கொசு மருந்து தெளிக்கப்பட்டன.

இந்த திட்டம் கடந்த ஜூலை 1-ந்தேதி தொடங்கப்பட்ட நிலையில் அதன் பயன்கள் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த திட்டம் தொடங்கப்பட்ட இரண்டு வாரத்துக்கு பிறகு டிரோன்கள் மூலம் கொசு மருந்து தெளிக்கப்பட்ட பகுதிகளில் அதற்கு முன்பும், மருந்து தெளிக்கப்பட்ட 24 மணி நேரத்துக்கு பிறகும் கொசுக்கள் உற்பத்தியாகும் அடர்த்தி குறித்து ஆய்வு செய்தனர்.

இதில் கொசு உற்பத்தியாகும் அடர்த்தி குறிப்பிடத்தக்க அளவில் குறைந்து இருப்பது தெரிய வந்துள்ளது. இதன் மூலம் கொசு தொல்லை 81 சதவீதத்தில் இருந்து 90 சதவீதம் வரை குறைந்து இருந்ததாக ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அதிகபட்சமாக தேனாம்பேட்டை மற்றும் வளசரவாக்கம் மண்டலங்களில் குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளது.

இதுவரை ஊழியர்கள் செல்ல முடியாத பகுதிகளில் டிரோன்கள் மூலம் கொசு மருந்து தெளிக்கப்படுகிறது. நீர் நிலைகளின் அனைத்து பகுதிகளிலும் மருந்து தெளிக்கப்படுகிறது.

அதே போல் கொசு மருந்து பயன்பாட்டில் 6 சதவீதம் குறைந்து மிச்சமாகி இருந்தது.

மேலும் கொசு மருந்து தெளிக்கும் பணியின் செலவும் குறைந்துள்ளது. ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் உள்பட பல்வேறு செலவுகள் குறைகிறது என்றும் அவர்களை வேறு பகுதிகளுக்கு பணிக்கு அனுப்பவும் முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டிரோன்கள் மூலம் கொசு மருந்து தெளிக்கும் பணிக்கு மாதத்துக்கு ரூ.22 லட்சம் செலவாகும் என்று சென்னை மாநகராட்சி மதிப்பிடப்பட்டுள்ளது.

# மருதமலை, பேரூர், உட்பட 290 கோயில்களில் முதல் கட்டமாக 50 கோயில்களில் தமிழில் அர்ச்சனை தொடங்கியது. பக்தர்கள் மகிழ்ச்சி

*கோவை, ஆகஸ்ட் 08 2021:* கோவையில் முதற்கட்டமாக மருதமலை, பேரூர், உட்பட 50 கோவில்களில் தமிழில் அர்ச்சனை செய்யப்பட்டது. இதனை பக்தர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். கோவில்களில் தமிழில் அர்ச்சனை நடைபெறும் என தமிழக அரசு அறிவித்திருந்தது. இதைத் தொடர்ந்து சென்னை கபாலீஸ்வரர் கோவிலில் இந்தத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இதையடுத்து மாநிலம் முழுவதும் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள கோவில்களில் தமிழில் அர்ச்சனை செய்வது நடைமுறைக்கு வந்துள்ளது. கோவை மாவட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டின் கீழ் உள்ள 290 கோவில்களில் முதற்கட்டமாக 50 கோவில்களில் தமிழில் அர்ச்சனை செய்யப்படுகிறது. இதுகுறித்து இந்து சமய அறநிலையத்துறை அதிகாரி நம்மிடம் கூறியதாவது- கோவை மாவட்டத்தில் மருதமலை சுப்பிரமணிய சுவாமி கோவில், பேரூர் பட்டீஸ்வரர் கோவில், ஆனைமலை மாசாணியம்மன் கோவில், கோவை தண்டு மாரியம்மன், கோனியம்மன், லட்சுமிநரசிம்மர் உட்பட 50 கோவில்களில் தமிழில்



அர்ச்சனை செய்வது தொடங்கப்பட்டுள்ளது. பக்தர்கள் தங்களது விருப்பத்தின் பேரில் தமிழ் அல்லது சமஸ்கிருதத்தில் அர்ச்சனை செய்து கொள்ளலாம். இதற்காக அந்த கோவில்களில் தமிழில் அர்ச்சனை செய்யப்படும் என அறிவிப்பு பலகை வைக்கப்பட்டுள்ளது. படிப்படியாக அனைத்து கோவில்களிலும் தமிழில் அர்ச்சனை திட்டம் அமல்படுத்தப்படும் இவ்வாறு அவர் கூறினார்.

# விருகம்பாக்கம் பகுதியில் பூட்டிய வீட்டை உடைத்து தங்க நகைகளை திருடிய 2 நபர்கள் கைது 7 1/2 சவரன் தங்கநகைகள் மற்றும் 141 கிராம் வெள்ளிப்பொருட்கள் மீட்பு

*சென்னை, ஆகஸ்ட் 08 2021:* விருகம்பாக்கம், இளங்கோ நகர், 5வது மெயின் ரோடில் வசித்து வரும் ராஜகோபால்ராவ், என்பவர் கடந்த 04.08.2021 அன்று வீட்டை பூட்டி விட்டு வெளியே சென்று விட்டு திரும்பி வந்து பார்த்த போது வீட்டின் பூட்டை உடைத்து பீரோவிலிருந்த 20 சவரன் தங்க நகைகள் மற்றும் வெள்ளிப் பொருட்களை யாரோ மர்ம நபர்கள் திருடிச்சென்றதாக ராஜகோபால்ராவ் என்பவர் விருகம்பாக்கம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

விருகம்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவயிடத்திற்கு சென்று தீவிர விசாரணை செய்தும், அருகில் பொருத்தியிருந்த சிசிடிவி கேமரா பதிவுகளைக் கொண்டும் மேற்படி வீட்டின் பூட்டை உடைத்து தங்கநகைகளை திருடிய குற்றவாளிகள் வெங்கடேஷ், தினேஷ், ஆகிய இருவரை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட குற்றவாளிகளிடமிருந்து 7 லு சவரன் தங்க நகைகள், 141 கிராம் வெள்ளிப்பொருட்கள் மற்றும் ரூ.465 பறிமுதல் செய்யப்பபட்டது. மேலும் விசாரணையில் கைது செய்யப்பட்ட வெங்கடேஷ் மீது கே.கே.நகர் காவல் நிலையத்தில் செல்போன் பறிப்பு வழக்குகள் உள்ளது தெரியவந்தது. விசாரணைக்குப்பின்னர் குற்றவாளிகள் இருவரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளனர்.







**சென்னை, ஆகஸ்ட் 08 2021: தமிழ்நாடு முதலமைச்சர், திமுக தலைவர் மு க ஸ்டாலின் முன்னிலையில் அ.தி.மு.க.வைச் சேர்ந்த நெல்லை மாநகர் மாவட்ட முன்னாள் செயலாளர் வசந்தி முருகேசன், முன்னாள் மேயர் புவனேஸ்வரி மற்றும் புதுகோட்டை ஒன்றியக்குழுத் தலைவர் பெ.சின்னையா, கவுன்சிலர் வெண்ணிலா கருப்பையா மற்றும் திருமயம் ஒன்றிய கவுன்சிலர் லட்சுமி தி.மு.க.வில் இணைந்தனர்.**

# தமிழ்நாடு யூனியன் ஆப் ஜேர்ணலிஸ்ட் சங்கத்தின் சார்பாக நினைவு பரிசு விழா

*திண்டுக்கல், ஆகஸ்ட் 08 2021:* திண்டுக்கல் மாவட்டத்தில் மக்கள் தகவல் தொடர்பு செய்தித்துறை அலுவலராக பணிபுரிந்து மதுரைக்கு மாறுதல் பெற்று சென்றுள்ள ஷாலி தளபதிக்கு தமிழ்நாடு யூனியன் ஆப் ஜேர்ணலிஸ்ட் சங்கத்தின் சார்பாக சால்வை அணிவித்து நினைவு பரிசு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் திண்டுக்கல் மாவட்ட தலைவர் ராமகிருஷ்ணன், மாவட்ட இணைச்செயலாளர் அரியநாயகம், மாவட்ட அமைப்பாளர் என்.ஜி.குமரேசன், மாவட்டத் துணைச் செயலாளர் ஹைருல்லா, மாவட்ட செயற்குழு உறுப்பினர் வாசுதேவன், வேடசந்தூர் தாலுக செயளாலர் செல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர்.



ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



கோவை: கோவை மதுக்கரை ஒன்றிய திமுக துணை பெருந்தலைவர் எம் ஆர் ஆர் பிரகாஷ் கலைஞரின் 3-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி செலுத்தினார்.



மதுரை: மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம் விஸ்வநாதபுரத்தில் கைத்தறி மற்றும் துணி நூல்துறை சார்பில் 7வது தேசிய கைத்தறி தினத்தை முன்னிட்டு மாவட்ட அளவிலான சிறப்பு கைத்தறி கண்காட்சியை மாவட்ட ஆட்சித் தலைவர் அனிஷ்சேகர் திறந்து வைத்து முதல் விற்பனையை துவக்கி வைத்தார்.

ஹலோ மிரர் மெட்ராஸ் - ல் விளம்பரம் செய்து பயனடைவீர்




கோவை: கோவை மத்திய சிறையில் போலீசார் 2 மணி நேரம் சோதனை கோவை மத்திய சிறையில் சுமார் ஆயிரத்து 800க்கும் மேற்பட்ட சிறைக் கைதிகள் மற்றும் தண்டனை கைதிகள் உள்ளனர்.சிஷீஸ்வீபீ-19 வைரஸ் தொற்று காரணமாக கோவை மத்திய சிறைச்சாலையில் உள்ள கைதிகள் அறைகளில் சோதனை செய்வதை போலீசார் தற்காலிகமாக நிறுத்தி வைத்து இருந்தனர். இந்த நிலையில் கோவை மாநகர காவல்துறை ஆணையாளர் தீபக் தாமோர் உத்தரவின்பேரில் கோவை மத்திய சிறையில் பல்வேறு பகுதிகளில் சோதனை செய்யப்பட்டது சுமார் 2 மணி நேரம் நடைபெற்ற இந்த சோதனையில் மத்திய சிறை கண்காணிப்பாளர் செந்தாமரைக்கண்ணன் தலைமையில் சுமார் 35க்கும் மேற்பட்ட காவலர்கள் மற்றும் மோப்ப நாய் வெடிகுண்டு நிபுணர்கள் உள்ளிட்டோர் சிறைச்சாலை முழுவதும் சோதனையில் ஈடுபட்டனர்.

போலீசார் திடீரென நடத்திய அதிரடி சோதனையில் சிறைச்சாலை வளாகம் முழுவதும் பல்வேறு இடங்களில் சோதனை செய்யப்பட்டது. மேலும் சோதனையின்போது சிறைக் கைதிகள் அனைவரும் சிறைச்சாலை வளாகம் முன்பு நிறுத்தி



கோவை : கோவை மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் டி.ஜி.பி சைலேந்திரபாபு தலைமையில் கோவை மண்டல காவல் துறை அதிகாரிகளுடனான ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்த் பங்கேற்ற நிகழ்ச்சி பாதுகாப்பிற்காக நீலகிரி மாவட்டம் வந்த தமிழக டி.ஜி.பி சைலேந்திரபாபு பின்னர் அவரது தலைமையில் கோவை மண்டலத்தில் உள்ள காவல் துறை அதிகாரிகளுடனான ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இதில் 2 சரக டி.ஐ.ஜி , 3 மாநகர காவல் ஆணையர்கள், 8 மாவட்ட மாவட்டகாவல் கண்காணிப்பாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். அப்போது கோவை மண்டலத்தில் சட்டம் ஒழுங்கு , போக்குவரத்து நெரிசல், பெண்கள் பாதுகாப்பு, காவல் துறை பொதுமக்களிடையேயான நல்லுறவு தொடர்பாக ஆய்வு மேற்கொண்டார். இதையடுத்து கோவை மண்டலம், மாநகர் பகுதிகளில் சிறப்பாக பணியாற்றிய காவல் துறை அதிகாரிகளுக்கு பரிசு, ஊக்க தொகைகள் வழங்கி பாராட்டினார்.



மதுரை: கொரானா காலத்தில் தன்னுடைய படிப்பு செலவுக்கு வைத்திருந்த பணத்தை ஏழை எளிய மக்களுக்கு உதவியதற்காக ஐநா சபையால் தேர்ந்தெடுக்கப்பட்ட மதுரையை சேர்ந்த முடிதிருத்தும் தொழிலாளியின் மகளான நேத்ராவின் பிறந்தநாளை முன்னிட்டு கடச்சனேந்தல் பகுதியில் உள்ள காப்பகத்தில் வசிக்கும் 250க்கும் மேற்பட்ட ஆதரவற்ற குழந்தைகள் முதியோர்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது. நேத்ராவிற்கு பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் வாழ்த்தும் பாராட்டும் தெரிவித்தனர்.

## புல்லூர் ஊராட்சியில் கொரோனா தடுப்பூசி முகாம் ஊராட்சி மன்றதலைவர் சூர்யா பாஸ்கர் தொடங்கி வைத்தார்



திட்டக்குடி: கடலூர் மாவட்டம் திட்டக்குடி வட்டம் புல்லூர் ஊராட்சியில் கொரோனா தடுப்பூசி முகாம் நடைபெற்றது.

முகாமிற்கு ஊராட்சி மன்றதலைவர் சூர்யா பாஸ்கர் தலைமை தாங்கினார். துணைலைவர் சுப்ரமணியன் முன்னிலை வகித்தார். மருத்துவர் அபிநயா முன்னிலையில் பொதுமக்கள் மற்றும் தூய்மை பணியார்களுக்கு கொரோனா தடுப்பூசி போடப்பட்டது.

பின்னர் கொரோனோ தடுப்பூசி முக்கியத்துவம் பற்றியும் அதன் நன்மைகள் குறித்தும் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இதில் செவிலியர் வீரசுந்தரி,மருந்து அலுவலர் சரவணன், ஊராட்சி செயலர் செந்திர்குமார்,அங்கன்வாடி பணியாளர் நதியா,வார்டு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



கோவை: ஆடி வெள்ளியில் புடவை அலங்காரத்தில் காட்சியளித்த மூகாம்பிகை அம்மன் அம்மனுக்கு உகந்த மாதமான ஆடி மாதத்தில் ஒவ்வொரு வார வெள்ளிக்கிழமையும் தனிச்சிறப்பு கொண்டவை. அம்மன் ஆலயங்களில் வெள்ளிக்கிழமைகளில் சிறப்பு வழிபாடும், அலங்காரமும் எப்போதும் நடைபெறுவது வழக்கம். அம்மனுக்கு உகந்த மாதமான ஆடி மாதத்தில் ஒவ்வொரு வார வெள்ளிக்கிழமையும் தனிச்சிறப்பு கொண்டவை. இதில் ஆடி வெள்ளியை முன்னிட்டு கோவை இடையர்பாளையம் பகுதியில் உள்ள மூகாம்பிகை கோவிலில் சிறப்பு அலங்காரம், சிறப்பு பூஜைகள் நடைபெருவது வழக்கம், அந்த வகையில் மூன்றாம் வாரம் ஆடி வெள்ளியை முன்னிட்டு மூகாம்பிகை கோவிலில் அம்மன் புடவை அலங்காரத்தில் காட்சியளித்தார்.

ஆடி வெள்ளி என்பதால் பக்தர்கள் சமூக இடைவெளியை கடைபிடித்து அம்மனை தரிசனம் செய்தனர்..

## இராஜஸ்தானை சேர்ந்த பெண்மணிக்கு வலது மார்பில் இருந்த பெரிய கட்டியை அகற்றி,கோவையை சேர்ந்த கேட்வே கிளினிக் மற்றும் மருத்துவமனை மருத்துவர்கள் சாதனை புரிந்துள்ளனர்




கோவை 08 2021: இராஜஸ்தான் மாநிலத்தை சேர்ந்த பெண் சங்கீதா.கடந்த சில ஆண்டுகளாக இவரது மார்பில் கட்டி ஒன்று இருந்ததை கண்ட அவரது குடும்பத்தினர்,போதிய மருத்துவ வசதிகள் இல்லாத இராஜஸ்தான் மாநிலத்திலேயே சிகிச்சைகள் மேற்கொண்டு வந்துள்ளார். இந்நிலையில் கட்டி சிறிது சிறிதாக பெரிதாகி உயிருக்கு ஆபத்தானதை தொடர்ந்து கோவை ஆர்.எஸ்.புரம் பகுதியில் உள்ள கேட்வே கிளினிக்கில் பரிசோதனை செய்துள்ளார். அவரை பரிசோதித்த டாக்டர் செந்தில் குமார் தலைமையிலான மருத்துவர்கள் உடனடியாக அவருக்கு நவீன அறுவை சிகிச்சை மூலம் கட்டியை அகற்றி உள்ளனர். இந்நிலையில் சிகிச்சை குறித்து, கேட்வே கிளினிக் மருத்துவமனையின் தலைவர் டாக்டர் செந்தில் குமார் மற்றும் மருத்துவர் பியூஸ் பட்வா ஆகியோர் செய்தியாளர்களை சந்தித்தனர். அப்போது பேசிய மருத்துவர் செந்தில்குமார்,6 வருடங்களாக இந்த கட்டியுடன் அவதிபட்டு வந்த பெண்ணுக்கு சரியான நேரத்தில் சிகிச்சை அளித்து கட்டியை அகற்றியதாக குறிப்பிட்ட அவர், நுரையீரலுக்கு அருகில் இருந்த கட்டியை அகற்றிய இந்த சிகிச்சை முறை,மருத்துவ துறையில் சாதனையாக பார்க்கப்படுவதாக தெரிவித்தார்.இந்த சந்திப்பின் போது செய்தி தொடர்பாளர் இளங்கோ உடனிருந்தார்.

## எல்அன்டி மற்றும் கூடு அமைப்பு இணைந்து செயல்படுத்தும் நீர்வள மேம்பாட்டு திட்டத்திற்காக துவக்க விழா கோவை மதுக்கரை பகுதியில் நடைபெற்றது




கோவை, 08 2021: கோவை மதுக்கரை ஒன்றியத்திற்கு உட்பட்ட மலுமிச்சம்பட்டி பகுதியில் எல்என்டி மற்றும் கூடு அமைப்பு இணைந்து நீர்வள மேம்பாட்டு திட்டத்தை செயல்படுத்த உள்ளது. இதற்கான துவக்க விழா பூஜையுடன் தொடங்கப்பட்டது. சி.எஸ்.ஆர் நிதியிலிருந்து 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டு செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. நீர்நிலைகளை பாதுகாக்கவும் வேளாண்மையை செம்மைப் படுத்தும் நோக்கில் இந்த நீர்வள மேம்பாட்டு திட்டம் இப்பகுதியில் தொடங்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தால் நிலத்தடி நீர் மட்டம் உயரும் என்றும் கருதப்படுகிறது. நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் வேளாண்மைத் துறையின் இணை இயக்குனர் சித்ராதேவி,மதுக்கரை ஒன்றிய துணை பெருந்தலைவர் எம்,ஆர்,ஆர்.பிரகாஷ், ஒன்றிய குழு உறுப்பினர் மாசிலாமணி, ,எல்அண்ட்டி நிறுவனத்தைச் சேர்ந்த பால் வர்கீஸ், தமிழ்நாடு நீர்வள துறை சேர்ந்த இளங்கோவன் மற்றும் கூடு தன்னார்வ அமைப்பின் செக்ரட்ரி கதிரேசன் ஜாயின்ட் செக்ரட்ரி சயினா பேகம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



திருவண்ணாமலை: திருவண்ணாமலை மாவட்டம், பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறையின் கீழ் பெறப்பட்ட மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி அவர்கள்,மாவட்ட ஆட்சித் தலைவர் முருகேஷ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திருவண்ணாமலை: திருவண்ணாமலை மாவட்டம் போளூர் அடுத்த களம்பூர் தேர்வுநிலை பேரூராட்சி எய்டு இந்தியா தொண்டு நிறுவனம் இணைந்து நடத்திய கொரோனோ தடுப்பு நடவடிக்கைகள் விழிப்புணர்வு பேரணி செயல் அலுவலர் உமா மகேஸ்வரி தலைமையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக வட்டாட்சியர் சாப்ஜான் கலந்து கொண்டார்.



திருவண்ணாமலை : திருவண்ணாமலை மாவட்டம் போளூர் அடுத்த கஸ்தம்பாடி ஊராட்சிக்கு உட்பட்ட இருளர் சமுதாய குழந்தைகளுக்கு புத்தாடைகள் எய்டு இந்தியா தொண்டு நிறுவனம் மூலம் வழங்கப்பட்டது நிகழ்ச்சியில் வட்டாட்சியர் சாப்ஜான் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார் உடன் அறங்காவலர் சிவகுமார்.



தூத்துக்குடி: தூத்துக்குடி மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலராக சு.ஜெகவீரபாண்டியன் அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டார் அவர் பணி சிறக்க ஹலோ மெட்ராஸ் நாளிதழ் சார்பில் வாழ்த்துகிறோம். தூத்துக்குடி மாவட்ட நிருபர் சே. மணிகண்டன்



திருவண்ணாமலை: கோவிட்- 19 பரவலை தடுக்கும் பொருட்டு, திருவண்ணாமலை மாவட்ட பொதுமக்களிடம் தொற்று நோய் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத்தறை அமைச்சர் எ.வ. வேலு அவர்கள மெகா விழிப்புணர்வு கோலம் பார்வையிட்டு, துண்டு பிரச்சுரங்கள் வழங்கி, பொதுமக்களுக்கு கபசுர குடிநீர் வழங்கி, மைம் டான்ஸ், குறும்படம் பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து நிகழ்ச்சியில் உரை நிகழ்த்தினார். நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், கூடுதல் மாவட்ட ஆட்சியர் மற்றும் கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



திருவண்ணாமலை: திருவண்ணாமலை மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலராக லோகநாதன் அவர்கள் மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் பொறுப்பேற்றுக்கொண்டார்.

# கொரோனா விதி மீறலால் இரண்டு கோவில்கள் மூடல் தாசில்தார் அதிரடி நடவடிக்கை

விக்கிரவாண்டி, ஆக 08 2021: விக்கிரவாண்டி பகுதிகளில் ஆடி மூன்றாம் வெள்ளி உற்சவத்தை முன்னிட்டு கொரோனா விதி மீறல்களால் இரண்டு கோயில்களை தாசில்தார் மூடியதால் பக்தர்களிடையே பரபரப்பு.

தமிழக அரசு கொரோனா நோய் தொற்று பரவலை தடுக்க ஆடி மாதத்தில் அனைத்து கோவில்களில் திருவிழா நடத்தக் கூடாது என மாவட்ட கலெக்டர் மூலம் உத்திரவிட்டிருந்தது. விழுப்புரம் மாவட்டத்தில் மேல்மலையனுயார், மயிலம் போன்ற பிரசித்திபெற்ற கோவில்கள் திருவிழா நடைபெறாமல் மூடப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று விக்கிரவாண்டி முத்துமாரியம்மன் கோவில் , முண்டியம்பாக்கம் பச்சைவாழியம்மன் கோவில்களில் ஆடி மூன்றாம் வெள்ளியை முன்னிட்டு குல தெய்வ வழிபாட்டுகாரர்களால் பொங்கல் வைத்து தங்கள் வேண்டுதலை நிறைவேற்ற ஒன்று கூடியதால் அளவிற்கு அதிகமாக பொதுமக்கள் கூட்ட நெரிசல் ஏற்பட்டது.

கொரோனா நோய் தொற்று எளிதில் பரவும் நிலை உருவாகியது.

இது பற்றி தகவலறிந்த தாசில்தார் தமிழ்செல்வி தலைமையில் சிறப்பு சப்ஜி இன்ஸ்பெக்டர் சரவணன், வி.ஏ.ஓ., க்கள் பால்ராஜ், ராஜேஷ் பாண்டியன், மலையப்பன் ஆகியோர் கொண்ட வருவாய் துறையினர் கோவில்களில் திடீர் ஆய்வு செய்த போது கூட்ட நெரிசல் உறுதியாகியதால், தாசில்தார் தமிழ்செல்வி, பக்தர்களுக்கு பொங்கல் வைக்கும் பக்தர்கள் பொங்கல் வைத்து உடனடியாக கோவில் வளாகத்தினை விட்டு வெளியேற உத்திரவிட்டும் , இனி வரும் இரண்டு வெள்ளிக்கிழமை களில் திருவிழா நடத்தக் கூடாது என நிர்வாகிகளுக்கு விளக்கமளித்து கோவில்களை மூட உத்திரவிட்டார். இதையடுத்து உடனடியாக இரு கோவில்களை பூசாரிகள்



மூடினர்.

திடீரென கோவில்கள் மூடப்பட்டதால் வெளியூர்களிலிருந்து நேர்த்தி கடன் செலுத்த வந்த பக்தர்களிடையே பரபரப்பு ஏற்பட்டது.

விக்கிரவாண்டியில் தாசில்தார் உத்திரவின் பேரில் முத்து மாரியம்மன் கோவில் கதவு உடனடியாக மூடப்பட்டது.

விக்கிரவாண்டி அடுத்த முண்டியம்பாக்கத்தில்தாசில் தார் உத்திரவின் பேரில் பச்சைவாழியம்மன் கோவில் கோவில் கதவு உடனடியாக மூடப்பட்டது.



மதுரை : மதுரை மாவட்டம் மேலூர் ஊராட்சி ஒன்றியம் கீழையூர் கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் உயர்திரு மாவட்ட ஆட்சித் தலைவர் அனிஷ்சேகர்அவர்கள் மரக்கன்று நடும் பணியினை பார்வையிட்டு மரக்கன்றினை நட்டார்.

Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

HELLO Mirror MADRAS
hellomadrasdaily@gmail.com
R.DIS No: 60/2021
Daily Morning Newspaper
The Truth

KARUNAI TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

VOLUME - 1 | CHENNAI | DAILY | 4 Pages | Sunday, August 08, 2021 | Rs.2/- | ISSUE - 25

# PM praises golfer Aditi Ashok for her show of skill and resolve

New Delhi, August 08 2021: The Prime Minister, Narendra Modi has lauded golfer Aditi Ashok for her skills and resolve during her steller performance at the Olympics.

In a tweet, the Prime Minister said :

"Well played @aditigolf! You have shown tremendous skill and resolve during #Tokyo2020 . A medal was narrowly missed but you've gone farther than any Indian and blazed a trail. Best wishes for your future endeavours"



# Union Health Ministry organizes an Interactive Workshop with Community Radio Stations and Private Radio Stations from Southern States

New Delhi, August 08 2021: Union Ministry of Health and Family Welfare in partnership with UNICEF, today, hosted an interactive communication session for representatives of Community Radio Stations and Private Radio Stations for creating meaningful awareness campaigns surrounding various issues related to COVID including about adhering to COVID Appropriate Behaviour (CAB), benefits of vaccine and to dispel misinformation and myths.




The session was addressed by Shri Lav Agarwal, Joint Secretary, MoHFW and was attended by over 70 representatives of Community Radio Stations and Private Radio stations from the five states of southern India- Kerala, Karnataka, Telangana, Andhra Pradesh and Tamil Nadu.

Lav Agarwal, in his key note address acknowledged the contribution of radio stations in supporting the world's largest vaccination drive by airing educative programs for their listeners and inspiring stories of HealthCare Workers (HCWs) and community participation in spreading message to follow Covid Appropriate Behaviour. These efforts played a positive role in uptake of vaccination among large number of vaccine eligible population while mitigating any vaccine and vaccination rumours, he added.

He emphasized that radio stations are a critical medium in delivering COVID messages among population residing in urban as well as remote areas. He said that radio plays a constructive role through innovative and engaging programmes to address unfounded concerns of linked to vaccine hesitancy by inviting subject experts on their program.

He urged the participants to highlight community led positive initiatives and role models from the frontline workers across sectors to strengthen public trust in world's largest adult vaccination programme. He also underlined the need to continuously remind citizens about need to strictly follow COVID Appropriate Behaviour as the second wave is still not over and that virus can come back as soon society ignores COVID safe behaviour.

He also emphasized on the importance of mental wellbeing during COVID and suggested that it is vital to address the issue on a regular basis. He further said that there are three important components of the fight against COVID - Community ownership of COVID Appropriate Behaviour, Evidence Based Reporting and Busting Myths on COVID and vaccination.

He presented a snapshot of the COVID situation in the country and highlighted the status of five states. He highlighted the various initiatives and steps being taken by the Government to strengthen the public health infrastructures.

The participants shared their experiences of innovative radio and talk shows to educate and inspire the listeners. Senior officials of the MoHFW, Ministry of Information & Broadcasting, and representatives from UNICEF attended the session.

# Strengthening APMCS through Agriculture Infrastructure Fund (AIF) Scheme

New Delhi, August 08 2021: Government of India has launched the Central Sector Scheme of financing facility under Agriculture Infrastructure Fund (AIF) to boost Agriculture Infrastructure relating to Post-Harvest Management (PHM) and Community Farming Assets in the country. Under this scheme financing facility of Rs.1 lakh crore is to be disbursed by banks/lending institutions as loans to eligible beneficiaries.

This financing facility will help APMCs to upgrade their infrastructure, which will ultimately benefit the farmers.




This information was given in a written reply by the Union Minister of Agriculture and Farmers Welfare Narendra Singh Tomar in Rajya Sabha today.

# Absolute Barbecues opens its first 'Wish Grill' restaurant in Trichy

Trichy, August 08 2021: Leading barbecue restaurant chain, Absolute Barbecues (AB's), opened its 44th restaurant on the 3rd Floor, 3/1 C, Annamalai Tower, Tiruchirapalli, Tamilnadu 620018, on Thrusday. With this, AB's has made its 09th foray in Tamil Nadu. The brand not only talks about customer-centricity but sets an example by practicing it. Hence, AB's has decided to follow the mantra once again this time and invited its top fans as chief guests for the inauguration. fans joined the ribbon-cutting ceremony of Absolute Barbecues on 05th August 2021 at 12 PM. AB's, which started in 2013, is already a well-known brand in the barbecue space with a presence in 19 cities in India with multiple footprints. The company runs two restaurants in Dubai as well.

"It has always been our endeavour to reach out to our customers. Trichy was on our radar for a long time as we were getting serious trade inquiries from that region. We are happy to have finally arrived in the bang of river Cauvery and I am confident that with the exemplary food and services we would be the most sought-after barbecue restaurant in the city soon," said Mr. Ashish Rai, COO, Absolute Barbecues.



Absolute Barbecues is well known for its unique 'Wish Grill' concept which provides its customers with a Do-It-Yourself (DIY) experience. The unique concept of 'Wish Grill' caught the attention of the customers with the new style of barbecuing clubbed with fun and frolic, and thereby promoting the concept of Do-It-Yourself cuisine.Absolute Barbecues in Trichy has a seating capacity of 122 guests which can be booked for any occasion and celebration. AB's have a unique way of celebrating birthdays and anniversaries and it always helped them to keep the momentum of the place high and vibrant.AB's practices all health, hygiene doable & government guidelines at all the restaurants where all restaurant employees are fully vaccinated and follow all safety measures while dealing with a customer. Now you can enjoy the barbecue delicacies with a starting range of Rs 599/-. The buffer price list of AB's Trichy outlet has been given below.

# PM interacts with Heads of Indian Missions abroad and stakeholders of the trade & commerce sector

New Delhi, August 08 2021: In a first of its kind initiative, the Prime Minister Narendra Modi interacted with Heads of Indian Missions abroad and stakeholders of the trade & commerce sector via video conference. The Union Commerce Minister and External Affairs Minister were also present during the interaction. The interaction also witnessed participation of Secretaries of more than twenty departments, state government officials, members of Export Promotion Councils and Chambers of Commerce.



Addressing the gathering, the Prime Minister said that this is the time for Azadi ka Amrit Mahotsav. Along with celebrating the 75th festival of independence, this is an opportunity to build a clear vision and roadmap for future India. In this, our Export Ambitions and all the stakeholders play a major role. He added that today the world is shrinking every day due to physical, technological and financial connectivity. In such an environment, new possibilities are being created around the world for the expansion of our exports. He lauded the stakeholders for this initiative and commended the enthusiasm, optimism and commitment shown by all of them to achieve our ambitious goals regarding exports. He reminded that one of the major reasons, India had the highest share in the global economy in the past was it's strong trade and exports. He stressed on the importance of strengthening our exports in regaining our old share in the global economy.

The Prime Minister urged the stakeholders to put all their efforts to take advantage of the new opportunities created by the changes in the Global Supply Chain in the Post Covid Global World. Considering the size of our economy and potential, our manufacturing and service industry base, there is tremendous potential for export growth. He added that when the country is moving towards the mission of Atmanirbhar Bharat, one of its goals is to increase India's share in exports manifold. He said that to achieve this we have to make sure that we get access to the global supply chain, so that our business can scale and grow. He added that our industry will also have to move towards the best technology, focus on innovation and increase share in R&D. He said our share in the Global Value Chain will grow only by following this path. While encouraging competition and excellence, we have to prepare global champions in every sector, he stressed.

The Prime Minister listed four factors that are very important for increasing exports. Manufacturing in the country has increased manifold and that has to be qualitatively competitive. Second, The problems of transport, logistics should be removed for that centre, states and private stakeholders will have to work continuously. Third, The government should walk shoulder to shoulder with the exporters and, finally, the international market for Indian products needs to be expanded . He said only when these four factors are synergized, India will be able to achieve the goal of Make in India for the world in a better way.

The Prime Minister said today, the government in the country, in the states is moving forward, understanding the needs of the business world. He listed the initiatives of the Government to boost MSMEs like many relaxations given in compliances under Atmanirbhar Bharat Abhiyan and provision of Emergency Credit Line Guarantee Scheme of Rs 3 lakh crore. He also noted that the Production Linked Incentive Scheme will not only help in increasing the scale of our manufacturing but also increase the level of global quality and efficiency. This will develop a new ecosystem of Atmanirbhar Bharat. The country will get new Global Champions in Manufacturing and Export. He elaborated how Production Linked Incentives helped to strengthen the mobile phone manufacturing sector. The mobile phone sector, we are also experiencing its impact. 7 years ago, we used to import mobile phones worth about $ 8 billion. Now, it has come down to $2 billion. 7 years ago, India used to export mobile phones worth only $ 0.3 billion. Now it has increased to more than 3 billion dollars.

The Prime Minister said the government, both at centre and states are also focussing to reduce the time and cost of logistics in the country. For this, work is going on at a rapid pace in every level to create a multimodal connectivity.

The Prime Minister said continuous efforts are being made by the government to minimize the impact of Pandemic. It is our best effort to keep the virus infection under control. The work of vaccination is going on at a fast pace in the country today. Every possible step has been taken to solve all the problems of the countrymen and the industry. He added that our industry and business has also innovated during this period, by adapting itself to new challenges. The industry also helped the country deal with the medical emergency and also played a role in reviving growth. This is the reason that today along with drugs and pharmaceuticals, our exports have reached a new level in sectors like agriculture. He said today we are seeing positive signs not only of recovery in the economy but also about high growth. Therefore, this is a good time to set high targets for exports and achieve them. He said the Government is taking necessary steps at every level to achieve this. Recently, he said the Government has taken a major decision for our exporters to get a boost of about Rs 88000 crore rupees in the form of insurance cover. Similarly by rationalizing our export incentives our exports would be WTO compliant and will also get a boost.

The Prime Minister stressed on the importance of stability in doing business. He said the decision taken by India to get rid of retrospective taxation shows our commitment, shows consistency in policies and gives a clear message to all the investors that India is not only opening the doors of new possibilities but the decisive Government of India, has the will to fulfill its promises.

The Prime Minister stressed on the role of states in achieving the export targets and implementing reforms, attracting investment, easing of doing business and creating last mile infrastructure. He said the central government is working closely with the states to minimize the regulatory burden so as to increase export and investment. He said a healthy competition is being promoted between the states to make export hubs in the states. States are being encouraged to focus on one product in each district.

The Prime Minister said our ambitious target regarding exports can be achieved only through a holistic and detailed action plan. He urged the stakeholders to accelerate our existing exports and also work to create markets, new destinations for new products. At present, almost half of our exports are to only 4 major destinations. Similarly, about 60 percent of our exports are related to Engineering Goods, Gems and Jewellery, Petroleum and Chemical Products and Pharmaceuticals. He urged them to find new destinations and also take our new products to the world. He added that with the opening of new sectors like Mining, Coal, Defense, Railways, our entrepreneurs are also getting new opportunities to increase exports.

The Prime Minister said to the Ambassadors, officials from the Ministry of External Affairs that in whichever country they are representing India, they understand the needs of that country very well. He asked them to act as a bridge for the commerce industry here. He urged that India Houses present in different countries should also be representative of the manufacturing power of India. He requested the Ministry of Commerce to put in place such a system so that there is a constant communication between our exporters and our missions.

The Prime Minister said for maximum benefit to our economy from our exports, we have to build a seamless and high quality supply chain within the country as well. For this we need to build a new relationship and a new partnership. He requested all Exporters to strengthen partnership with our MSMEs, farmers and our fishermen, promote our Startups and support them.

The Prime Minister gave a call to establish a new identity of Quality and Reliability. He said it is our endeavor to create a natural demand for high value-added products of India in every nook and corner of the world. He assured the industry, all the exporters that the government will support them in every way. He urged the industry to prove the resolve of Atmanirbhar Bharat and a prosperous India!

Union External Affairs Minister Shri S. Jaishankar highlighted the unique character of the event. He said that while the theme of the event is local goes global, the Indian Missions also need to be globally local to help connect our producers with the demand in specific countries. Union Commerce Minister Shri Piyush Goyal said that the global environment is favourable and we should look at leveraging comparative and competitive advantages with respect to other countries for increasing our exports.

Heads of Indian Missions gave their inputs and suggestions to increase India's exports. They talked about setting sector and region specific trade targets, the need to focus on value addition, quality standards of products, supply chain diversification, ensuring reliability in supplies and improving connectivity. They said that there is a need to focus on new markets and region specific products, while at the same time, maintaining our competitive edge in the regions and products where we are doing well currently.

# Union Home Minister, Amit Shah extended his greetings on the occasion of National Handloom Day

New Delhi, August 08 2021: Union Home Minister, Amit Shah extended his greetings on the occasion of National Handloom Day today. In his tweets, Shri Amit Shah said, "On National Handloom Day, I extend my warm wishes to our immensely talented weaver community and the people associated with it."

"We are blessed to have a vibrant handloom heritage industry that is globally recognized and the Modi Government is leaving no stone unturned to empower this sector."

"This National Handloom Day, let us all pledge to wear India Handloom products and motivate others to do the same. This is the best way to promote and preserve our rich tradition of the ancient weaves in the true sense."



Owned & Pubilshed by R.SATHYANARAYANAN from No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 26, and printed by him at chennai offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-2, Editor: R.SATHYANARAYANAN, Email: hellomadrasdaily@gmail.com. Contact: 8148231942. Subject to Chennai Court Jurisdiction